
பக்கங்கள் 17+ 03

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆனி 29 ஞாயிற்றுக்கிழமை 13.07.2024 | அதிர்வு 344

## செவ்வந்தியின் தாயார் சிறையில் உயிரிழப்பு !



பாதாள உலகக் குழு உறுப்பினர் கணேமுல்ல சஞ் சீவவின் படுகொலை வழக்கில் பிரதான சந்தேகநபரான 02

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# போர்க்குற்றவாளிகளுக்கு எதிராக எந்தவித நடவடிக்கையும் இல்லை

## சிறீதரன் எம்.பி. கடும் விசனம்



“இனப்படுகொலை மற்றும் போர்க்குற்றங்களில் ஈடுபட்ட படையினர் மீது இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. மாறாக தமிழர் தரப்பைக் குற்றவாளியாகக் காண்பிக்கும் முயற்சி இடம்பெறுகின்றது.”

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் 02

# இலங்கையைப் பிரிக்கும் முயற்சி தொடர்கின்றது!

## இந்தியா மீது தம்மரத்ன தேரர் பாய்ச்சல்



இலங்கையைப் பிரிக்கும் இந்தியாவின் முயற்சி இன்றும் மாற்றமின்றி தொடர்கின்றது என்று பேராசிரியர் இந்துராகரே தம்மரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

இந்திய அரசாங்கம் இதற்காகப் பல்வேறு உத்திகளைத் கையாள்கின்றது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொக்காவில் தாக்குதலின் 35ஆவது நினைவேந்தல் நிகழ்வில் பங்கேற்று உரை யாற்றிய போதே பேராசிரியர் இந்துராகரே தம்மரதன தேரர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

“நாட்டைப் பிரிக்க வேண்டும் என்ற இந்தியாவின் நிலைப்பாடு ஒரு தசம 02

# இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறிய தமிழக மீனவர்கள் எழுவர் இன்று கைது!

(ஜெகதீஸ்வரன் பிரஷாந்த்)



தமிழக மீனவர்கள் 7 பேர் யாழ். கடற்பரப்பில் ஒரு படகுடன் இன்று அதிகாலை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்ட குற்றச்சாட்டிலேயே மேற்படி மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தமிழகம், இராமேஸ்வரம் பகுதியில் இருந்து 02




# காரைதீவில் 7 மாணவர்களுக்கு 9 ஏ

**(வி.ரி. சகாதேவராஜா)**

2024 ஆம் ஆண்டுக்கான ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சையில் காரைதீவு சார்பாக 7 மாணவர்கள் 9 ஏ சிறந்த பெறுபேறுகளைப் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

காரைதீவு இ.கி.ச .பெண்கள் பாடசாலையைச் சேர்ந்த ஆறு மாணவிகள் காரைதீவு பாடசாலைகளில் அதிகூடிய 9 ஏ சித்திகளைப் பெற்றுள்ளனர்.

ஜே.சதுஸிகா, பி.சபித்தா, எஸ்.ஹருஸ்ஸியா, எஸ்.மோபிகா, யூ.லோவித்யா, வை.வைசாலி ஆகிய ஆறு மாணவிகளே 9 ஏ பெற்றவர்கள் ஆவர்.

காரைதீவு விபுலானந்த மத்திய கல்லூரியில் எஸ்.றவீன் என்ற மாணவன் மாத்திரம் 9 ஏ சித்தி பெற்றுள்ளார்.

இதைவிட வேறெந்த பாடசாலைகளிலும் 9 ஏ சித்தி பெறப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, 2023 இல் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சை முடிவுகளின்படி காரைதீவு பிரதேச பாடசாலைகளில் மொத்தமாக 24 மாணவர்கள் 9 ஏ சித்திகளைப் பெற்றிருந்தனர்.

காரைதீவு இ.கி.ச. பெண்கள் பாடசாலையில் 17 மாணவர்கள் 9 ஏ சித்தி பெற்று சாதனை படைத்திருந்தனர்.

விபுலானந்த மத்திய கல்லூரியில் 5 மாணவர்களும், சண்முகா மகா வித்தியாலயத்தில் 2 மாணவர்களும் 9 ஏ சித்தி பெற்றிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## செவ்வந்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இஷாரா செவ்வந்தியின் தாயார் வெலிக்கடைச் சிறைச்சாலையில் உயிரிழந்துள்ளார்.

அவர் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மாரடைப்பு காரணமாக உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இஷாரா செவ்வந்தியின் தாயார் மற்றும் சகோதரர் இருவரும் கொலைக்கு உதவிய குற்றச்சாட்டில் முன்னதாகக் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இந்நிலையில், தலைமறைவாக உள்ள இஷாரா செவ்வந்தியைக் கண்டுபிடித்து கைது செய்ய பொலிஸார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## போர்க்குற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தலைவர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

கொட்டகலையில் நேற்று நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் உட்பட சில விடயங்களை தமிழ்த் தரப்புகள்தான் செய்தன என்பதுபோல் வெளியில் ஒரு மாயை காட்டப்படுகின்றது. இதற்கு பின்னால் இருந்து ஆட்சி அமைத்த கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் மஹிந்த குடும்பம் மீது இதுவரையில் எந்தப் பாய்ச்சல்களையும் இந்த அரசு செய்யவில்லை.

இன அழிப்பு மற்றும் போர்க்குற்றங்களைச் செய்த இராணுவத் தளபதிகள் மீதோ அல்லது அதனை மேற்கொண்ட அரசுகள் மீதோ எந்த விசாரணையும் மேற்கொள்ளப்படவில்லை.

இந்நிலையில் தமிழ்த் தரப்பைக் குற்றவாளியாகக் காண்பிக்கும் முயற்சி இடம்பெறுகின்றது. இது தொடர்பில் நாம் கூடுதல் அவதானத்துடன் இருக்க வேண்டும்." – என்றார்.

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன்று அதிகாலை TN/10/MM/0746 என்ற இலக்கம் கொண்ட விசைப்படகில் பயணித்த மீனவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்

கைது செய்யப்பட்டுள்ள தமிழக மீனவர்கள் அனைவரும் காங்கேசன்துறை கடற்படைத் தளத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளதுடன் விசாரணைகள் மற்றும் மருத்துவ பரிசோதனைகளின் பின்னர் நீரியல் வளத்துறையினர் ஊடாக நீதிமன்றத்தில் முற்படுத்தப்படுவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது

இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் 24 படகுகளுடன் 181 தமிழக மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புள்ளிக் கூட மாறவில்லை. இந்தியா இப்போது இலங்கைக்கு 300 பில்லியன் ரூபா கடன் நிவாரணம் வழங்கப் போகின்றது.

இலங்கை இந்தியாவுக்குச் செலுத்த வேண்டிய 1.7 பில்லியன் டொலர்களை மீள அறவிடாமல் நமது பெரிய சகோதரர் கடன் நிவாரணம் வழங்கப் போகின்றார்.

புலம்பெயர் மக்களைப் பயன்படுத்தியேனும், அப்பாவித் தமிழ் மக்களைப் பயன்படுத்தியேனும், தந்திரோபாயங்களைப் பயன்படுத்தியேனும், நமது நாட்டைப் பொருளாதார ரீதியாகவோ, பிராந்திய ரீதியாகவோ அல்லது அரசியல் ரீதியாகவோ ஒரு நாடாக நிலைகுலைத்து இறுதியில் 29 ஆவது இந்திய மாநிலமாக உருவாக்கி, அதன் பின்னர் கிழக்கு மற்றும் வடக்கை உடைத்த உடனேயே 30ஆவது இந்திய மாநிலமாக உருவாக்கும் திட்டமே இடம்பெறுகின்றது." – என்றார்.



# வவுனியாவில் வீரமக்கள் தினம் அனுஷ்டிப்பு

(கி.வசந்தன்)

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் 36 ஆவது வீர மக்கள் தினம் வவுனியா கோயில்குளத்தில் அமைந்துள்ள க.உமாமகேஸ்வரன் இல்லத்தில் இன்று இடம்பெற்றது.

ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினரும் வவுனியா மாநகர சபையின் மேயருமான சு.காண்டீபன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் அ.அமிர்தலிங்கத்தின் உருவப்படத்துக்கு மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்த வீரமக்கள் தினத்தின் இறுதி நாள் நிகழ்வுகள் எதிர்வரும் 16 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நிகழ்வில் கழகத்தின் வவுனியா மாவட்ட முக்கியஸ்தர் க.சந்திரகுலசிங்கம் (மோகன்), ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் செயலாளர் நா.ரட்ணலிங்கம், தமிழரசுக் கட்சியின் மத்திய குழு உறுப்பினர் நா.சேனாதிராஜா மற்றும் கழகத்தின் உறுப்பினர்கள் கலந்துகொண்டிருந்தனர்.











# சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஒன்று கூடல் நிகழ்வு !

(உடப்பு க.மகாதேவன்)

ஆராச்சிக்கட்டு பிரதேச சபைக்கு உட்பட்ட 5 ஆம், 6ஆம் வட்டாரப் பகுதியில், உடப்பு பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றுச்சூழல் பாதுகாப்பு சம்பந்தமான ஒரு ஒன்று கூடல் நிகழ்வு இன்று (13)ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

அதில் உடப்பு பொலிஸ் நிலையத்திலுள்ள அதிகாரி அஜித் கலந்து கொண்டு மக்களுக்கு அறிவுரையை வழங்கினார்.

இந்தப் பகுதியில் வாழும் மக்கள் தமது வளவுகளில் தேங்கிக் கிடக்கும் குப்பைகளை எங்கு போடுவது, அதனை எவ்வாறு ஓரங்கட்டுவது போன்ற பல இன்னல்களை சந்திப்பதாகக் கருத்துக் கூறினர். இதனை நிவர்த்தி செய்யும் முகமாக ஆராச்சிக்கட்டு பிரதேச சபைக்கான உறுப்பினர் ந.கமலேஸ்வரன், இங்குள்ள வடிகான் மற்றும் பாதை துப்பரவு செய்தல், மின்சார விளக்குகள் பொருத்துதல் போன்ற விடயங்களை மக்களுக்கு தெளிவு படுத்தினார்.

இதன் போது குறிப்பிட்ட சில பகுதிக்கு குப்பைகளை எடுப்பதற்கு பிரதேச சபைக்கான வண்டி வருவதில்லை எனவும் மக்கள் புகார் செய்தனர். இதனை தான் கவனத்தில் எடுப்பதாகவும் ந.கமலேஸ்வரன் குறிப்பிட்டார்.



# போதைப்பொருள்களுடன் மூவர் வசமாகச் சிக்கினர்

இலங்கையின் வெவ்வேறு பகுதிகளில் நேற்று சனிக்கிழமை பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் ஐஸ் மற்றும் ஹெரோயின் போதைப்பொருள்களுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அலுபோமுல்ல பொலிஸ் பிரிவின் மாலமுல்ல பகுதியில் 25 கிராம் 200 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளுடன் ஒரு சந்தேகநபரும், 10 கிராம் 300 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் மற்றுமொரு சந்தேகநபரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் கோனதுவ மற்றும் வஸ்கடுவ பகுதிகளைச் சேர்ந்த 39 மற்றும் 40 வயதுடையவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

அத்தோடு, கல்கிஸை பொலிஸ் பிரிவின் இரத்மலானை பகுதியில் 11 கிராம் 790 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள் மற்றும் போதைப்பொருள் விற்பனை மூலம் பெற்றப்பட்டதாகச் சந்தேகிக்கப்படும் 53 ஆயிரத்து



100 ரூபா பணத்தொகை என்பவற்றுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் இரத்மலானை பகுதியைச் சேர்ந்த 40 வயதுடையவர் எனத் தெரியவந்துள்ளது.

மேலும், இந்தச் சம்பவங்கள் குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### யாழ். எழுவைதீவுக் கடலில் மிதந்த

# ஒன்றரைக் கோடி ரூபா பெறுமதியான கஞ்சா!

யாழ்ப்பாணம், எழுவை தீவுப் பகுதியில் 15 மில்லியன் ரூபா பெறுமதியான கஞ்சா பொதிகள் இன்று மீட்கப்பட்டுள்ளன.

எழுவைதீவு கடற்பகுதியில் கடற்படையினர் மேற்கொண்ட சுற்றுகாவல் நடவடிக்கையின் போது, கடலில் சந்தேகத்துக்கு இடமான முறையில் மிதந்து வந்த பொதிகளை மீட்டு, சோதனையிட்ட போது அவற்றினுள் இருந்து சுமார் 15 மில்லியன் ரூபா பெறுமதியான 38 கிலோ 700 கிராம் கேரளா கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட கேரள கஞ்சா பொதிகளை மேலதிக சட்ட நடவடிக்கைக்காக ஊர்காவற்றுறைப் பொலிஸாரிடம் கடற்படையினர் ஒப்படைத்துள்ளனர்.






நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# தெற்கின் இயலாமை

'மனம் உண்டானால் இடம் உண்டு' என்பார்கள். விருப்பமிருந்தால் - பற்றுறுதி இருந்தால் - வழி கிட்டும் என்பதும் அதன் அர்த்தம்தான்.

ஒருவர் எதையாவது சாதிக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தால், தடைகளைப் பொருட்படுத்தாமல் அவற்றைத் தாண்டி அதைச் செய்வதற்கான வழியைக் கண்டுபிடிப்பார். சவால்களைச் சமாளிப்பதில் மன உறுதி மற்றும் விடாமுயற்சியின் சக்தியை வலியுறுத்தும் வாசகங்கள் இவை.

பொருளாதார நெருக்கடி உட்பட பல்வேறு சிக்கல்களில் மாட்டியிருக்கும் இலங்கைக்கு சட்டம் - ஒழுங்கை நிர்வகிக்கும் அல்லது நிலை நிறுத்தும் விடயத்தில் பாதாள உலகக் குழுக்களின் செயற்பாடு பெரும் சவாலாக மாறி வருகிறது.

இந்த ஆண்டு இதுவரை இலங்கையில் 66 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் நடந்துள்ளன; அவற்றில் 48 சம்பவங்கள் பாதாள உலகக் குழுக்களின் நடவடிக்கைகள் தொடர்பானவை என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

ஜனவரி 01, 2025 முதல் நாடு முழுவதும் நடந்த துப்பாக்கிச் சூடுகளில் 35 பேர் கொல்லப்பட்டனர் எனவும், 37 பேர் காயமடைந்துள்ளனர் எனவும் பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

1980களில் இலங்கையில் வெடித்த இனயுத்தம் 2009இல் முடிவுக்கு வந்தது. இந்த யுத்தத்தின் தீவிரம் தான் இலங்கையில் துப்பாக்கிகள் உட்பட உயிர் குடிக்கும் வெடிப்பொருள்களின் - ஆயுதங்களின் - தாராளச் செயற்பாடுகளுக்கு வழி வகுத்தது என்பது வெளிப்படையாகத் தெரிந்த விடயம்.

வடக்கிலும், கிழக்கிலும்தான் யுத்தம் தீவிரமாக இடம்பெற்றது. ஆனால் யுத்தம் முடிந்து இந்த 16 ஆண்டுகள் காலத்தில் வடக்கிலும், கிழக்கிலும் துப்பாக்கிச் சத்தங்கள் முழுமையாக ஓய்ந்து விட்டன. பீரங்கிகளின் முழக்கம் அடங்கிவிட்டது. ஷெல் குண்டுகளின் அதிர்வுகள் அடியோடு தளர்ந்து விட்டன.

நிரந்தர சமாதானம் - நிலையான அமைதி - இன்னமும் இலங்கைத் தீவில் ஏற்படாவிட்டாலும், யுத்தத்தினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட தமிழர் தாயகமான வடக்கிலும் கிழக்கிலும் ஆயுத மோதல்கள், துப்பாக்கிச் சூடுகள், அவற்றை ஒட்டிய வன்முறைகள் முழுமையாக அடங்கிவிட்டன.

ஆனால், வடக்கு - கிழக்கு யுத்தத்துக்காக தென்னிலங்கை தருவித்த ஆயுதங்கள் இன்னமும் தெற்கில் கனன்று கொண்டே இருக்கின்றமையைத்தான் இப்போதைய சூட்டுச் சம்பவங்கள் வெளிப்படுத்துகின்றன. அத்தகைய சம்பவங்கள் வடக்கிலும், கிழக்கிலும் இல்லை. தெற்கில்தான் இன்னும் நீடிக்கின்றன.

தமிழர் தாயகத்தில் உலகத்தையே வியக்க வைத்த போராளிகளின் முப்படைகளும் காவல்துறையும் முழு அளவில் ஒரு காலத்தில் செயற்பட்டன. ஆயுதங்கள் வெடி மருந்துகள் தாராளமாகக் குவிந்து கிடந்தன. அவை புதைக்கப்பட்ட களஞ்சியங்கள் இன்னமும் முழுமையாகக் கண்டுபிடித்து அகற்றப்படவில்லை. ஆனால் துப்பாக்கிச் சன்னம் வெடிக்காத அமைதி - அது மயான அமைதியாயினும் கூட - வடக்கு, கிழக்கில் நீடிக்கின்றது. ஆனால் தெற்கிலோ நிலைமை மோசமாக - தலை கீழாக - உள்ளது.

தமிழரின் விடுதலைப் போராட்டத்தை யுத்த குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், அடிப்படை மனித உரிமை மீறல்கள் போன்றவை மூலம் அடக்கிய தென்னிலங்கையால், தன்னுடைய மண்ணில் பாதாள உலகக் குழுவினரால் மேற்கொள்ளப்படும் அராஜகங்கள், அட்டூழியங்களை அடக்க முடியாமல் இருக்கின்றது என்று கூறுவது விநோதமானது.

'மனம் உண்டானால் இடம் உண்டு.' தமிழர் தாயகம் மீது ஏவிய கொடூரத்தை தம் பகுதியில் ஏவி விட சிங்கள பேராண்மை ஆட்சித் தரப்புத் தயார் இல்லை. அதனால் பாதாள உலகக் குழுக்களின் செயற்பாடு தொடர்வது தடுக்க முடியாததாகதான் நீடிக்கும்.



# மானிப்பாய் இராஜகாரியர் வீதி புனரமைப்புப் பணிகள் ஆரம்பம்

மக்களின் நீண்ட கால கோரிக்கைக்கு அமைவாக மானிப்பாய் சந்தியில் இருந்து இராஜகாரியர் வீதி முழுமையாக பிரதேச சபை நிதியில் புனரமைப்பு செய்யப்படவுள்ளது.

200 மீற்றர் முழுமையாகவும் 400 மீற்றர் பகுதி அளவிலும் மொத்தமாக 600 மீற்றர் நீளமான வீதி வேலைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதற்கு உரிய ஆரம்ப நிகழ்வு பிரதேச சபைத் தவிசாளர், பொது மக்கள் பங்களிப்புடன் வட்டார மக்கள் பிரதிநிதி கலொக் கணநாதன் உஷாந்தனால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இங்கு கருத்து தெரிவித்த பிரதேச சபை உறுப்பினர் உஷாந்தன், கடந்த தேர்தலில் பெருமளவு மதுபானம், பணம் வழங்கப்பட்டாலும் மக்கள் அவை எல்லாவற்றையும் தாண்டி எமக்கு வாக்களித்தார்கள். அதற்குக் காரணங்கள் இல்லாமல் இல்லை. அதன் பிரதிபலன்களை இப்போது மக்கள் அனுபவிக்க ஆரம்பித்துள்ளார்கள்.

தொடர்ந்து அபிவிருத்திகளை மேற்கொள்ள நீங்கள் அனைவரும் ஆதரவளிக்க வேண்டும்.– என்றார்.







# தமிழ் அரசியல் கைதிகள் உயிர்ப்புடன் விடுதலைபெற வேண்டிப் பிரார்த்தனை!

தமிழ் அரசியல் கைதியான விக்னேஸ்வரநாதன் பார்த்தீபன், 17 வயதில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக சிறையில் வாடிக் கொண்டிருக்கின்றார்.

பிள்ளையின் நீண்ட பிரிவுத் துயர் தாங்காது, தாய், தந்தை இருவரும் உயிர்நீத்த நிலையில், பெற்றவர்களது இறுதிச் சடங்குகளுக்கு ஒரு ஆயுள் தண்டனை கைதியாக கைவிலங்குடன் கொண்டுவரப்பட்டு சிதைகளுக்கு கொள்ளியிட்ட பின்பு மீண்டும் சிறைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

பார்த்தீபனின் தாயாரான அமரர் விக்னேஸ்வரநாதன் வாகீஸ்வரி யின் மூன்றாமாண்டு நினைவேந்தல் நாளான இன்று, யாழ்ப்பாணம்- திருநெல்வேலியில் உள்ள அவரது இல்லத்தில், பார்த்தீபன் உட்பட்ட சக தமிழ் அரசியல் கைதிகள் உயிர்ப்புடன் விடுதலை பெற்று குடும்பங்களுடன் இணைய வேண்டுமென்ற பிரார்த்தனை இடம்பெற்றது.

அத்துடன் நூதன போராட்டம் ஒன்றும் 'குரலற்றவர்களின் குரல்' அமைப்பால் இன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

அதாவது, குடும்பத்தின் உற்ற உறவுகளை இழந்தும் பிரிந்தும் நீண்ட நெடுங்காலங்களாக அடிமைச்சிறை அனுபவித்துக் கொண்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளின் உயிர்ப்புடனான விடுதலையை வலியுறுத்தும் முகமாக "விடுதலை பெருவிருட்சம் வேரூன்றி தைளைத்திட ஒரு குவளை நீர் உவந்து உறவுகளை விடுவிப்போம்..!" எனும் கருப்பொருளில், சமூக ஆர்வலர்களின் கரம் இணைத்து தொடர உள்ளனர்.

இந்தப் போராட்டத்தில் நல்லெண ணம் கொண்ட ஒவ்வொருவரும் தத்த மது வீடுகளில் இருந்து ஒரு குவளை தண்ணீரை பொதுக் குவளைக்கு உவந்தளிப்பதன் மூலம், நாட்டப்படும் 'விடுதலைப் பெருவிருட்சம்' வேரூன்றி தளைத்திட உங்களது பங்களிப்பையும் அர்ப்பணிக்க முடியும் என்று ஏற்பாட்டா ளர்கள் தெரிவித்துள்ளனர். அதற் கமைய, இந்த மனிதநேயப் பணியில் இனம், மதம், மொழி கடந்து நல்லுள்ளம் கொண்ட அனைவரும் தம்மை இணைத் துக் கொள்ளவேண்டும் என்று 'குரலற்ற வர்களின் குரல்' அமைப்பினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.











# மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தின் நினைவுச் சிலைக்கு அடிக்கல் நடல்

“தேசத்தின் குரல்” அன்ரன் பால சிங்கத்தின் நினைவுச் சிலைக்கான அடிக்கல் நடும் நிகர்வு நேற்று (12) பாரிஸின் புறநகர்களின் ஒன்றான பொண்டி என்ற நகரின் நடைபெற்றது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் அரசியல் ஆலோசகராகவும் கொள்கை வகுப்பாளராகவும் தமிழீழத்தின் தத்துவா சிரியருமாக இறுதி வரை செயற்பட்டவர்.

தமிழீழ மக்களின் விடுதலைக்காக இராஜதந்திர ரீதியில் பெரும் பங்களிப்புச் செய்த மூத்த இராஜதந்திரியாகவும் தமிழீழ மக்களுக்கான தலைமை அமைதிப் பேச்சு வார்த்தைக்கான பிரதிநிதியாகவும் தமிழீழ மக்களின் அரசியல் குரலாக அவர் உலகம் முழுவதும் ஓங்கி ஒலித்தவர்.

அவர் தனது வாழ்நாள் முழுவதும் தமிழீழ மக்களுக்காக ஆற்றிய அரும் பணிக்காக தமிழீழ மக்களின் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிர பாகரனால், அன்ரன் பாலசிங்கம் “தேசத்தின் குரல்” என்ற அதியுயர் கௌரவத்தை வழங்கி மதிப்பளிக்கப் பட்டார்.

இவருடைய நினைவாக பிரான்சின் பாரிஸ் புறநகர்களின் ஒன்றான பொண்டி என்ற நகரில் உள்ள நகரபூங் காவவில் அன்ரன் பாலசிங்கத் தின் சிலையை நிறுவுவதற்கான அனும தியை பொண்டி நகரசபை வழங்கியிருந்து.

நிகழ்வில் பொண்டி நகரின் மேயர் ஸ்டீபன் ஏர்வே மற்று நகரசபை உறுப் பினர்கள் கலந்துகொண்டனர்.

நிகழ்வை பிரான்ஸைத் தளமாகக் கொண்டு இயங்கும் தமிழ்ப் பண்பாடு வலயம் மற்றும் கார்த்திகை 27 சங்கம் ஆகிய இரண்டு அமைப்புக்களும் இணைந்து முன்னெடுத்தன.



# தேவைப்பாடுடைய குடும்பத்துக்கு கூரை சீற்கள் வழங்கி வைப்பு



(த.சுபேசன்)

சாவகச்சேரி – கோவிற்குடியிருப்புக் கிராமத்தில் தேவைப்பாடுடைய குடும்பம் ஒன்றின் கோரிக்கைக்கு அமைவாகச் சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் கு.பிரணவராசாவால் வெள்ளிக்கிழமை ஒரு தொகுதி கூரை சீற்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

குரங்கின் அட்டகாசம் காரணமாக சேதமடைந்த வீட்டின் கூரைப் பகுதியை திருத்தும் முகமாகவே இந்த உதவித் திட்டம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சிப் பிரதேசத்தில் குரங்கின் தொல்லை காரணமாக பெருமளவான விவசாயக் குடும்பங்கள் வாழ்வாதாரத்தை இழந்துள்ளன. உடைமைகளும் சேதமாக்கப்பட்டுள்ளன.

தென்மராட்சியில் 42 ஆயிரம் குரங்குகள் காணப்படுகின்றன. அண்மையில் நடத்தப்பட்ட கணக்கெடுப்பின் ஊடாகக் கண்டறியப்பட்டுள்ள போதிலும் இதுவரை அதனைக் கட்டுப்படுத்த ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எவையும் முன்னெடுக்கப்படவில்லை.

மாறாக வாயுத் துப்பாக்கிகள் மாத்திரமே குறிப்பிட்டளவு வழங்கப்படுகின்றன. இருப்பினும் அவற்றின் ஊடாகக் குரங்குகளை முழுமையாக கட்டுப்படுத்த முடியாது என்பதும் குறிப்பிடத்தக்கது.





# மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள விவகாரத்தில் ஜனாதிபதி தீர்வு வழங்குவார்!

## பிரதி அமைச்சர் பிரதீப் தெரிவிப்பு

(க.கிஷாந்தன், பொகவந்தலாவ எஸ்.சதீஷ்)

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள விவகாரத்தில் ஜனாதிபதி நேரில் தலையிட்டு வெகு விரைவில் தீர்வை வழங்குவார் என்று தோட்ட உட்கட்டமைப்பு பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதிப் தெரிவித்தார்.

கொட்டகலை அரசினர் ஆசிரியர் கலாசாலையின் அதிபராக (2022) ஹட்டன் கல்வி வலய பிரதிக் கல்வி பணிப்பாளராக சேவையாற்றி அண்மையில் ஓய்வு பெற்ற திருமதி மாயழகு சந்திரலேகா கிங்ஸ்லியின் பணி நயப்பு விழா கொட்டகலை ஆசிரியர் கலாசாலை சமூகத்தினரால் நடத்தப்பட்டது.

கலாசாலை அதிபர் சு.பிரசாந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக தோட்ட உட்கட்டமைப்பு பிரதி அமைச்சர் சுந்தரலிங்கம் பிரதீப், கொட்டகலை ஆசிரியர் கலாசாலையின் முன்னாள் மாணவரும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சிவஞானம் ஸ்ரீதரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கல்வி வெளியீட்டுத் திணைக்கள



முன்னாள் ஆணையாளர் நாயகம் சு. முரளிதரன் கலாசாலையின் முன்னாள் மற்றும் தற்போதைய விரிவுரையாளர்கள், பாடசாலை அதிபர்கள், வீரகேசரி பத்திரிகையின் உதவி ஆசிரியர் சி. சிவகுமார், முன்னாள் ஆசிரிய மாணவர்கள் எனப் பலரும் கலந்துக் கொண்டனர்.

இந்நிகழ்வில் கலந்துக் கொண்ட பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

மக்கள் வழங்கிய ஆணையின் பிரகாரம், மக்களுக்கு சேவை வழங்கும் நோக்கிலேயே உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைத்தோம். இதற்கு எவ்வித நிபந்தனையும் இன்றியே சில தரப்புகள் ஆதரவு அளித்தன. ஆட்சி அமைப்பதற்காக நாம் எந்தவொரு திட்டத்திலும் ஈடுபடவில்லை. எவ்வித ஒப்பந்தமும் கிடையாது. மக்கள் வழங்கிய ஆணையை மதித்தே செயற்பட்டு வருகின்றோம்.

மலையகத்தில் கடந்த காலங்களில் இடம்பெற்ற மோசடிகள் தொடர்பில் நிச்சயம் விசாரணைகள் இடம்பெறும். எவரேனும் குற்றம் இழைத்திருந்தால் சட்டத்தின் பிரகாரம் நிச்சயம் தண்டனை வழங்கப்படும். எமது ஆட்சியில் குற்றவாளிகள் தப்ப முடியாது.

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள விவகாரத்தில் வெகுவிரைவில் தலையிட்டு ஜனாதிபதி தீர்வை வழங்குவார். உள்ளக மட்டத்தில் பேச்சுகள் நடத்தப்பட்டுவருகின்றன. அந்தவகையில் ஜனாதிபதி மிக விரைவில் நடவடிக்கை எடுப்பார். சிலவேளை அரசும் இதற்குரிய தீர்வை வழங்கலாம். – என்றார்.





# மன்னாரில் ஆரம்பமானது வடக்கு பூப்பந்தாட்ட பிரீமியர் லீக்!

**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)**

வடமாகாண பூப்பந்தாட்ட சங்கம் ஏற்பாடு செய்த வட மாகாண பூப்பந்தாட்ட பிரீமியர் லீக் சுற்றுப் போட்டி நேற்றுச் சனிக்கிழமை (12) காலை மன்னார் மாவட்ட பொது விளையாட்டு மைதான உள்ளக அரங்கில் ஆரம்பமானது.

இந்தப் போட்டியில் கலந்து கொள்ள வடக்கு மாகாணத்தில் இருந்து 06 அணிகளும், அதன் உரிமையாளர்களும் கலந்து கொண்டனர்.

வடமாகாண பூப்பந்தாட்ட சங்கத்தின் செயலாளரும், வடமாகாண பூப்பந்தாட்ட லீக் தலைவருமான எம்.பிரின்ஸ் லெம்பேட் தலைமையில் போட்டி ஆரம்பமானது. இந்த நிகழ்வில் விருந்தினர்களாக மன்னார் பிரதேசச் செயலாளர் எம்.பிரதீப், மன்னார் நகர முதல்வர் டானியல் வசந்தன், உதவி மாவட்டச் செயலாளர் வி.டில்சான் பயஸ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது விருந்தினர்கள் வரவேற்கப்பட்டதோடு நிகழ்வுகள் ஆரம்பமானது. இதன்போது விருந்தினர்களாக கலந்து கொண்ட மன்னார் பிரதேச செயலாளர் எம்.பிரதீப், மன்னார் நகர முதல்வர் டானியல் வசந்தன் ஆகியோர் இணைந்து வடமாகாண பூப்பந்தாட்ட பிரீமியர் லீக் கிண்ணத்தை அறிமுகம் செய்து வைத்தனர்.

அதனை தொடர்ந்து அணிகளின் அறிமுகம் இடம் பெற்ற நிலையில் முதல் சுற்று ஆரம்பமானது.

இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை இறுதிச் சுற்று மற்றும் பரிசளிப்பு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.









# இடைக்குறிச்சி சர்வோதயா முன்பள்ளி மாதிரிச் சந்தை

(த.சுபேசன்)

தென்மராட்சி, இடைக்குறிச்சி சர்வோதயா முன்பள்ளியின் மாதிரிச் சந்தை நிகழ்வு அண்மையில் முன்பள்ளி வளாகத்தில் இடம்பெற்றிருந்தது.



# செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வில் இரண்டாமிடம்

(த.சுபேசன்)

அண்மையில் இடம்பெற்ற மாகாண மட்ட செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வில் தென்மராட்சி இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலய தரம் மூன்று கலப்பு அணியினர் பங்குபற்றி இரண்டாம் இடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளனர்.








# நியூயோர்க் மேயர் வேட்பாளராக ஜோஹ்ரான் மம்தானி !

## அமெரிக்க அதிகாரத்துக்குச் சிம்ம சொப்பனம்!

**- ஐங்கரன் விக்கினேஸ்வரா.**

(நியூயோர்க் மாநகர ஜனநாயகக் கட்சியின் மேயர் பதவி வாக்கெடுப்பில் 56 வீத வாக்குகளைப் பெற்று அதிகார பூர்வமாக வெற்றி பெற்றுள்ளதுடன், முதல் முறையாக முஸ்லிம் மேயராக ஜோஹ்ரான் மம்தானி தேர்வு செய்யப்பட்டால், அவர் பல எதிர்ப்புகளை தாண்டிய வரலாற்றுப் வெற்றியை பெறுவார்.)

இந்திய – அமெரிக்கரான ஜோஹ்ரான் மம்தானி நியூயோர்க் நகர மேயர் பதவியின் ஜனநாயகக் கட்சி வேட்பாளராக உறுதி செய்யப்பட்டுள்ளார். ஜோஹ்ரான் மம்தானி, நியூயோர்க் மாநில சட்டமன்ற உறுப்பின ராகவும், ஜனநாயக சோசலிசவாதியாகவும் திகழும் நிலையில், நியூயோர்க் நகர மேயர் பதவிக்கான ஜனநாயகக் கட்சியின் முதன்மைத் தேர்தலில் தனது வெற்றியை அறிவித்துள்ளார்.

**நியூயோர்க் மேயர் வேட்பாளர்**

33 வயது இளைஞன் ஜோஹ்ரான் மம்தானி (Zohran Mamdani) தன்னை ஜனநாயக சோசலிசவாதி என வெளிப்படையாகக் கூறி வருபவர். இவரிடம் தோல்வியுற்ற முன்னாள் ஆளுநர் கோமோவும் தற்போதைய மேயர் எரிக்கும் சுயேச்சையாகப் போட்டியிடப் போவதாய் அறிவித்துள்ளனர்.

நியூயோர்க் மேயருக்கான தேர்தல் நவம்பர் 4 ஆம் திகதியே இடம்பெறவுள்ளது. மம்தானிக்கு எதிராக இதுவரை பெருமளவு பணம் 30 மில்லியன் டொலர்கள் வரை செலவிடப்பட்டுள்ளது.

அமெரிக்காவில் அவரை வீழ்த்துவதற்கான எல்லா வியூகங்களுக்கும் பணத்தை வாரி இறைக்கப் பெரும் தலைவர்கள் தயாராக உள்ளனர்.

ஆனாலும் 50,000இற்கு மேற்பட்ட தொண்டர்கள் இவரின் முதலாவது வெற்றிக்காகப் பங்காற்றியிருந்தார் கள். 20,000 மேற்பட்ட மக்கள் இவருக்கு நிதியுதவி அளித்துள்ளார்கள். இதன் மூலம் 18 மில்லியன் டொலர் சேகரிக்கப்பட்டது. ஒரு கட்டத்தில் தனக்கு பணம் வேண் டாம், தொண்டர்கள் மட்டுமே வேண்டும் என்று அறி வித்தார்.

இவர் திரைப்பட இயக்குனர் தயாரிப்பாளர் மீரா நாயரின் மகனாவார். இவரது தற்போதைய வெற்றியே அமெரிக்காவில் பரபரப்பாய் உள்ளது.

முஸ்லிம் மதத்தை சேர்ந்த ஜோஹ்ரான் அமெரிக்கா வின் நியூயோர்க் மாநகர ஜனநாயகக் கட்சியின் மேயர் பதவி வாக்கெடுப்பில் 56 வீத வாக்குகளைப் பெற்று அதிகாரப்பூர்வமாக வெற்றி பெற்றுள்ளார். முதல் முறையாக முஸ்லிம் மேயராக ஜோஹ்ரான் மம்தானி



தேர்வு செய்யப்பட்டால், அவர் பல எதிர்ப்புகளை தாண்டிய வரலாற்றுப் வெற்றியை பெறுவார்.

முற்போக்கான ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த அவருக்கு எதிராக பெரும் நிதியுதவியுடன் கூடிய ஜி -இஸ்ட் பிரச்சாரம் இருந்த போதிலும், ஐந்து பெருநகரங் களிலும் கிட்டத்தட்ட ஒரு மில்லியன் யூத குடியிருப்பாளர்கள் இருந்த போதிலும், அவரைப் பதவி நீக்கம் செய்வதற்கான முயற்சிகள் அனைத்தும் தோல்வியடைந்தன.

**யார் இந்த ஜோஹ்ரான் மம்தானி?**

உகண்டாவின் கம்பாலாவில் 1991 ஆம் ஆண்டு பிறந்தவர் ஜோஹ்ரான் மம்தானி. சலாம் பாம்பே, மான்சூன் வெட்டிங் போன்ற பிரபல திரைப்படங்களை இயக்கிய மிரா நாயர் இவரது தாயார் ஆவார். தந்தை கல்வியாளர் மஹ்மூத் மம்தானி. தென்னாபிரிக்காவின் கேப் டவுனில் குழந்தைப் பருவத்தைக் கழித்த ஜோஹ் ரான் ஏழு வயதில் நியூயோர்க் நகரில் பெற்றோர்களுடன் குடிபெயர்ந்தார்.

போடோயின் கல்லூரியின் இளங்கலைப் பட்டப்படிப்பு பயிலும்போதே ஜோஹ்ரானின் அரசியல் வாழ்க்கை தொடங்கியது. பாலஸ்தீன நீதிக்கான மாணவர்கள் என்ற அமைப்பை நிறுவினார். அஸ்டோரியா மற்றும் லாங் தீவு உள்ளிட்ட நகரங்களை உள்ளடக்கிய 36 ஆவது மாவட்டத்தின் பிரதிநிதியாக நியூயோர்க் மாகாண அவைக்கு 2019 ஆம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டார்.

சிரியா நாட்டின் கலைஞர் ராமா துவாஜி என்பவரை இந்த ஆண்டு தொடக்கத்தில் ஜோஹ்ரான் திருமணம் செய்துகொண்டார். மலிவு விலை வீடுகள், பொது

தொடர்ச்சி▼



# நியூயோர்க் மேயர் வேட்பாளராக ஜோஹ்ரான் மம்தானி !

**தொடர்ச்சி▲**

போக்குவரத்து மற்றும் புலம்பெயர்ந்தோர் உரிமைகள் ஆகியவற்றை தொடர்பாக தொடர்ந்து பிரசாரம் மேற் கொண்டு வருகிறார்.

தனது முற்போக்கு கருத்துகளால் நியூயோர்க் இளைஞர்கள், இடதுசாரி கருத்துடையவர்கள் மத்தியில் ஜோஹ்ரானுக்கு அதிக வரவேற்புக் கிடைத்துள்ளது. தற்போது ஜனநாயகக் கட்சி வேட்பாளர் தேர்தலில் வெற்றி பெற்றுள்ள நிலையில், நியூயோர்க் மேயராக ஜோஹ்ரான் தேர்வாக அதிக வாய்ப்புள்ளது என்று கூறப்படுகிறது.

நியூயோர்க் மேயராக அவர் தெரிவானால், முதல் முஸ்லிம் மற்றும் இந்திய – அமெரிக்க மேயர் என்ற வரலாறு உருவாகும்.

**மோடி ஒரு போர்க் குற்றவாளி**

நரேந்திர மோடி முதல் இஸ்ரேல் வரை, ஜோஹ்ரான் மம்தானி பலரை வெளிப்படையாக விமர்சனம் செய்துள் ளார். கடந்த மாதம், இந்திய பிரதமர் நரேந்திர மோடி, மேடிசன் சதுக்கத் தோட்டத்தில் ஒரு கூட்டத்தை நடத் தினால், அதன் பிறகு ஒரு கூட்டு பத்திரிக்கையாளர்கள் சந்திப்பை நடத்தினால் அதில் நீங்கள் பங்கேற்பீர்களா என்ற கேள்வி மம்தானியிடம் முன்வைக்கப்பட்டது.

என் அப்பாவும் அவரது குடும்பத்தினரும் குஜராத்தை பூர்வீகமாகக் கொண்டவர்கள். குஜராத்தின் முஸ்லிம் களை கொத்துக் கொத்தாகக் கொல்ல மோடி உதவினார். அங்கே அளவுக்கு அதிகமான வன்முறை நிலவியது. தற்போது குஜராத்தில் இஸ்லாமியர்களே இல்லை என்பது போன்ற ஒரு தோற்றம் நிலவுகிறது.

நாம் பெஞ்சமின் நெதன்யாகுவை பார்ப்பதைப் போன்றே, மோடியையும் பார்க்க வேண்டும். அவர் ஒரு போர்க் குற்றவாளி, என்று மம்தானி பதில் அளித்தார்.

நியூயோர்க்கில், அவரது இந்த அறிக்கைக்குப் பிறகு சில இந்திய – அமெரிக்கர்கள், இந்துத்துவா குழுக்கள் அவரது கருத்தை, வெறுப்பு கொண்ட – பிரிவி னையை ஏற்படுத்தும் கருத்து என்று விமர்சித்தனர். மம்தானி மன்னிப்பு கேட்க வேண்டும் என்றும் கோரிக்கை வைத்தனர்.

**நெத்தின்யாகு வந்தால் கைது!**

நியூயோர்க்குக்கு இஸ்ரேலிய பிரதமர் நெத்தின்யாகு வந்தால் கைது செய்வேன் எனவும் சூளுரைத்துள்ளார். அது மட்டுமல்ல இந்திய பிரதமர் மோடியை தனது நகரம் வரவேற்காது. குஜாராத்தில் இஸ்லாமியர்கள் படுகொலைக்கு மோடியே காரணம் எனவும் காரசாரமாக விமர்சித்துள்ளார்.

ஜோஹ்ரான் சியோனிச வாதிகள் மீது காட்டமான விமர்சனம் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது நியாயத்தை கதைத்தால் வாக்குக் கிடையாது என்று ஒதுங்கும் அரசியல் தலைமைகள் தங்கள் ஒவ்வாமையை வெளிக்காட்டத் தொடங்கிவிட்டார்கள். அமெரிக்காவின் அதிகாரத்துவ கோட்டைக்குள்ளேயே சிறு புரட்சி நடக்கிறது என்றால் மிகையாகாது.

அத்துடன் பாலஸ்தீன விவகாரத்தில் ஜனநாயகக் கட்சியின் பெரும்பான்மை தலைவர்களிடம் இருந்து மாறுபட்ட கருத்தைக் கொண்டிருக்கிறார் மம்தானி. அவர் பாலஸ்தீனத்துக்கு ஆதரவாகவும், இஸ்ரேலை தொடர்ந்து எதிர்த்தும் – விமர்சித்தும் வருகிறார்.

அமெரிக்க தொலைக்காட்சி நேர்காணல் ஒன்றில், இஸ்ரேல் ஒரு யூத நாடாக இருப்பதை அவர் எதிர்த்தார். “மதம் மற்றும் இதர கூறுகளின் அடிப்படையில் குடியு ரிமை பிரிக்கப்படும் எந்த ஒரு நாட்டையும் நான் ஆதரிக்க மாட்டேன். அனைத்து நாடுகளிலும் சமத்துவம் நிலவ வேண்டும். இதுதான் என் நம்பிக்கை” என்று அவர் கூறியுள்ளார்.

பாலஸ்தீனர்களின் சர்ச்சைக்குரிய ‘க்ளோபலைஸ் தி இண்டிஃபாதா (Globalise the Intifada)” என்ற முழக்கத்தில் இருந்து அவர் விலகி நிற்கவில்லை. இண்டிஃபதா என்பது இஸ்ரேலிய ஆக்கிரமிப்புக்கு எதிராக நடைபெற்ற பாலஸ்தீன போராட்டங்களைக் குறிப்பிடும் சொற்றொடர் ஆகும்.

இது தொடர்பாகப் பேசிய அவர் “இந்த முழக்கம் மனித உரிமைகளுக்கான பாலஸ்தீன மக்களுடைய போராட்டத்தின் அடையாளம்” என்றும் கூறியுள்ளார். “இது சமத்துவத்துக்கான குரல். வன்முறைக்கான குரல் இல்லை” என்றும் அவர் கருதுகிறார்.

ஆனால் அவரது கருத்தை விமர்சிக்கும் பலரும், இந்த முழக்கம் சர்வதேச அளவிலான வன்முறைக்கு வழி வகுக்கிறது. இது யூத வாக்காளர்கள் மத்தியில் அச்சத்தைப் பரப்புகிறது என்று குறிப்பிடுகின்றனர்.

**உடை, உணவு, இருப்பிட இலவச பஸ் சேவைகள்**

மம்தானி உடை, உணவு, இருப்பிடம், இலவசப் பேருந்து சேவை போன்றவற்றை முன்னிறுத்தித் தனது பிரசாரத்தை நடத்தி வருகிறார். சாமானியர்களின் குரலாக இருக்களிடம் விரும்புவதாக பொது மக்களுக்கு அவர் தொடர்ந்து வாக்குறுதி கொடுத்துள்ளார்.

இலவச பஸ் சேவை, அனைத்துக் குழந்தைகளுக்கு மான பாதுகாப்பு, நகர சபையால் நடத்தப்படும் கடைகள், மலிவு விலை வீடுகள், இதன் அடிப்படையில் அவர் தேர்தல் வாக்குறுதிகளைத் தயார் செய்து வருகிறார்.

பிபிசியிடம் பேசும்போது மம்தானி, இந்த நகரத்தில் நான்கில் ஒருவர் என்ற அளவில் மக்கள் வறுமையில் வாழ்கின்றனர். ஐந்து லட்சம் குழந்தைகள் தினமும் இரவு பசியோடு உறங்குகின்றனர் என்றும் தெரிவித்தார்.

இந்த நகரைச் சிறப்பாக மாற்றும் அடையாளத்தை இந்த நகரம் இழந்து வரும் அபாயத்தில் உள்ளது என்று அவர் எச்சரித்தும் கூறியுள்ளார். அவரது தீவிர பிரசாரத்தின் போது காங்கிரஸ் உறுப்பினர் அலெக்ஸ ாண்டிரியா ஒகாசியோ – கோர்டெஸ் மற்றும் செனெட்டர் பெர்னி ஸாண்டர்ஸ் ஆகியோர் மட்டுமே ஆதரவளித் துள்ளனர்.

# மேற்கு வங்கம், கேரளா, தமிழகத்தில் பா.ஜ.க கூட்டணி ஆட்சியை பிடிக்கும்

## அமித் ஷா நம்பிக்கை



“பா.ஜ.க. மீது மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கை, அபிமானம் அதிகரித்து வருகிறது. அடுத்தடுத்து நடைபெற உள்ள தேர்தல்களிலும் பா.ஜ.க. மாபெரும் வெற்றி பெறும். மேற்கு வங்கம், கேரளா, தமிழகத்தில் பா.ஜ.க. கூட்டணி ஆட்சியை பிடிக்கும்.”

– இவ்வாறு மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தெரிவித்துள்ளார்.

கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் பா.ஜ.கவின் புதிய தலைமை அலுவலகத்தை மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா நேற்று திறந்து வைத்தார். பின்னர், பா.ஜ.க. நிர்வாகிகள் கூட்டத்தில் அவர் உரையாற்றுகையில்,

“கேரளாவில் கொம்யூனிஸ்ட் கட்சியினரால் பா.ஜ.க. தொண்டர்கள் கொல்லப்படுகின்றனர். நாம் நூற்றுக் கணக்கான தியாகிகளை இழந்துவிட்டோம். நமது கட்சியை ஆட்சியில் அமர்த்துவதுதான் நமது நோக்கம். வரும் உள்ளாட்சி தேர்தலில் பா.ஜ.க. 21,000 வார்டுகளில் போட்டியிடும். 25 சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகளை பெற்று, பெரும்பாலான வார்டுகளில் பா.ஜ.க. வெற்றி பெறும்.

பா.ஜ.கவை வடநாட்டு கட்சி என காங்கிரஸ் கட்சியினர் உள்ளிட்டோர் கூறி வருகின்றனர். திரிபுராவில் கொம்யூனிஸ்ட் ஆட்சியை அகற்றி நாம் ஆட்சி அமைத்துள்ளோம். மக்களவை தேர்தலில் தெலுங்கானாவில் முக்கிய சக்தியாக உருவெடுத்துள்ளோம். அடுத்தடுத்து நடைபெற உள்ள தேர்தல்களிலும் நாம் மாபெரும் வெற்றியை பெறுவோம். அந்த வகையில், மேற்கு வங்கம், கேரளா, தமிழகத்தில் பா.ஜ.க. கூட்டணி ஆட்சியை பிடிக்கும். கடந்த 2014 ஆம் ஆண்டு மக்களவை தேர்தலில் பா.ஜ.கவுக்கு கேரள மக்கள் 11 சதவீத வாக்குகளை வழங்கினர். 2019 ஆம் ஆண்டில் 16 சதவீத வாக்குகளையும், 2024ஆம் ஆண்டில் 20 சதவீத ஓட்டுகளையும் வழங்கியுள்ளனர். பா.ஜ.க. மீது மக்கள் வைத்திருக்கும் நம்பிக்கை, அபிமானம் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. தற்போது பா.ஜ.க. ஆட்சி அமைக்கும் தருணம் வந்துவிட்டது. பிரதமர் மோடி தலைமையின் கீழ் நாம் ஆட்சி அமைக்கப்போகிறோம்.” என்றார்.

# பிரபல நடிகர் கோட்டா சீனிவாச ராவ் உடல்நலக் குறைவால் காலமானார்



தென்னிந்திய மொழிகளில் பிரபல நடிகராக இருந்த கோட்டா சீனிவாச ராவ் (வயது 83) காலமானார்.

தமிழில் 2003 ஆம் ஆண்டு வெளியான ‘சாமி’ படத்தில் வில்லனாக நடித்து பிரபலமானவர் கோட்டா சீனிவாச ராவ். தொடர்ந்து ‘குத்து’, ‘ஜோர்’, ‘ஏய்’, ‘திருப்பாச்சி’, ‘பரமசிவன்’, ‘சத்யம்’, ‘கோ’, ‘சாமி 2’, ‘காத்தாடி’ என பல்வேறு திரைப்படங்களில் நடித்தார். ஏற்ற இறக்கத்துடன் அவர் பேசும் வசனங்கள் தமிழில் மிகவும் புகழ்பெற்றன.

‘சாமி’ படத்தில் இடம்பெற்ற வசனங்கள் இன்றளவும் மிகவும் பிரபலமாக இருந்து வருகின்றன. அதே போல விஜய் நடித்த ‘திருப்பாச்சி’ படத்தில் கோட்டா சீனிவாச ராவ் ஏற்று நடித்த ‘சனியன் சகடை’ என்ற கதாபாத்திரமும் பெரும் வரவேற்பை பெற்றது. வில்லன் கதாபாத்திரம் தவிர்த்து பல்வேறு குணச்சித்திர, நகைச்சுவை கதாபாத்திரங்களிலும் அவர் நடித்திருந்தார். ‘ஆல் இன் ஆல் அழகுராஜா’ படத்தில் பெண் வேடமிட்ட சந்தானத்துடன் கோட்டா சீனிவாச ராவ் நடித்த காட்சிகளை தமிழ் ரசிகர்களால் மறக்க முடியாது.

தமிழ், தெலுங்கு உள்ளிட்ட தென்னிந்திய மொழிகளில் 40 ஆண்டுகளுக்கும் மேலாக 750 இற்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ளார் கோட்டா சீனிவாச ராவ். பத்மஸ்ரீ மற்றும் நந்தி விருதுகள் உட்பட ஏராளமான விருதுகளையும் அவர் பெற்றுள்ளார். விஜயவாடா கிழக்குத் தொகுதியின் சட்டப்பேரவை உறுப்பினராகவும் இருந்துள்ளார்.

சிலகாலமாக சினிமாவில் இருந்து ஒதுங்கி இருந்த அவர் உடல்நலக் குறைவு மற்றும் வயது மூப்பால் அவதிப்பட்டு வந்தார். சில தினங்களுக்கு முன்பு மெலிந்த உடலுடன் இருக்கும் அவரது புகைப்படம் சமூக வலைதளங்களில் வெளியாகி பேசுபொருளானது. இந்த நிலையில் 83 வயதாகும் கோட்டா சீனிவாச ராவ் ஹைதராபாத்தில் உள்ள அவரது வீட்டில் காலமானார். அவரது மறைவுக்கு பிரபலங்கள், ரசிகர்கள் பலரும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

# திருவள்ளூரில் சரக்கு ரயில் தடம் புரண்டு பயங்கர தீ விபத்து; ரயில் சேவை பாதிப்பு



திருவள்ளூர் ரயில் நிலையம் அருகே கச்சா எண்ணெய் ஏற்றிச் சென்ற சரக்கு ரயில் தடம் புரண்டு, பயங்கர தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

சென்னை, மணலி ஐ.ஓ.சி.எல்-இல் இருந்து, சரக்கு ரயில் ஒன்று, 52 டேங்கர்களில் கச்சா எண்ணெய் ஏற்றிக் கொண்டு இன்று அதிகாலை மைசூர் நோக்கி சென்று கொண்டிருந்தது. அந்த ரயில், திருவள்ளூர் ரயில் நிலையத்தை கடந்து சென்ற போது, எதிர்பாராத விதமாக ரயில் என்ஜின் தடம் புரண்டது. இதனால், சுமார் 70 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட கச்சா எண்ணெய் டேங்கர்களில் உரசல் ஏற்பட்டு ஒரு டேங்கரில் தீப்பற்றியது. அந்த தீ வேகமாக 6 டேங்கர்களுக்கும் பரவி, கொழுந்து விட்டு எரிந்து வருகிறது.

இதுகுறித்து, தகவலறிந்து, திருவள்ளூர், திரூர், கும்மிடிப்பூண்டி சிப்காட் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து தீயணைப்பு நிலைய வீரர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்து, ரசாயனம் கலந்த நீரை பீய்ச்சி அடித்து தீயை அணைக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

# நாசாவில் பணிபுரியும் 2,000 ஊழியர்களை பணிநீக்கம் செய்கின்றார் டொனால்ட் ட்ரம்ப்




அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், நாசாவில் பணிபுரியும் சுமார் 2,000 ஊழியர்களை பணிநீக்கம் செய்ய திட்டமிட்டுள்ளதாகவும், இது குறித்த அதிகாரபூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும் என்றும் கூறப்படுவது பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் செலவுகளை குறைக்க பல அதிரடி நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். அந்த வகையில், தற்போது அடுத்த கட்டமாக, நாசாவில் உயர் பொறுப்பில் இருக்கும் 2,000 இற்கும் மேற்பட்ட ஊழியர்களைப் பணிநீக்கம் செய்ய திட்டமிட்டுள்ளார் என கூறப்படுகிறது.

அமெரிக்க அரசாங்க வட்டாரங்களில் இருந்து வெளியான தகவலின்படி, 2,145 பேரை பணிநீக்கம் செய்யப் பட்டியலிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த அதிரடி முடிவு ஊழியர்கள் மத்தியில் ஒரு பக்கம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ள நிலையில், இன்னொரு பக்கம் அமெரிக்காவின் எதிர்கால ஆராய்ச்சி கடுமையாக பாதிக்கப்படும் என்றும் கூறப்படுகிறது.

குறிப்பாக, நிலாவுக்கு மனிதர்களை அனுப்ப நாசா 2026 ஆம் ஆண்டு திட்டமிட்டுள்ள நிலையில், இந்த பணிநீக்கத்தால் அந்த பணிகள் பாதிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

# ஏமனில் குண்டு வெடிப்பு; 5 சிறுவர்கள் உயிரிழப்பு





தென்மேற்கு ஏமனில், நேற்று குடியிருப்பு பகுதியில் உதைபந்து விளையாடிக் கொண்டிருந்தபோது, 5 சிறுவர்கள் வெடிகுண்டு வெடித்ததில் பலியாகினர்.

அரசாங்கத்துடன் இணைந்த இஸ்லாக் கட்சியின் ஆதரவு போராளிகளால் நடத்தப்பட்ட தாக்குதலிலேயே இந்த சிறுவர்கள் கொல்லப்பட்டனர் என்ற தகவல் வெளியாகியுள்ள போதிலும், அந்த தகவல் உறுதிப்படுத்தப்படவில்லை.

இதேவேளை, உக்ரைன் மீது நேற்று ஒரே நாளில் மாத்திரம் ரஷ்யா 620 ஆளில்லா விமானங்கள் மற்றும் ஏவுகணைகளைப் பயன்படுத்தித் தாக்குதல் நடத்தியுள்ளது.

இதில் 4 பேர் உயிரிழந்துள்ளனர். பலர் காயமடைந்துள்ளனர்.

இது தொடர்பில் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ள உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமீர் ஜெலன்ஸ்கி, நாட்டின் பல பகுதிகளில் ரஷ்யா கடுமையான தாக்குதல்களை மேற்கொண்டதாகக் குற்றம் சுமத்தியுள்ளார்.

எனினும் தங்களது வான் பாதுகாப்புப் படையினர் ரஷ்யாவின் தாக்குதல்களை முறியடித்தனர் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில், ரஷ்யாவின் இந்த செயற்பாடுகளைக் கண்டித்து, அந்த நாட்டின் மீது இன்னும் அதிக தடைகளை விதிக்க வேண்டும் என்று உக்ரைன் ஜனாதிபதி சர்வதேச நாடுகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கனடா முரசு
ஞாயிற்றுக்கிழமை 13/07/2025

## காயங்களுடன் சிறுமி மீட்பு




கனடாவின் ஒன்ராறி 03




# கனடாவில் வலுப்பெற்ற வேலைவாய்ப்பு சந்தை

கனடாவின் தொழிற்சந்தை தொடர்பில் புதிய தகவல்களை அந் நாட்டு புள்ளிவிபரவியல் திணைக் களம் வெளியிட்டுள்ளது.

ஜூன் மாதத்தில் கனடாவின் வேலைவாய்ப்பு சந்தை எதிர்பா ராத வகையில் வலுப்பெற்றுள்ள தாக ஜூலை 5 அன்று வெளி யான அறிக்கை தெரிவிக்கப்படுகின் றது.

03

# ஹமில்டன் நகரில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் பெண் பலி




ஹமில்டன் நகரின் மையப்பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் பெண் ஒருவர் உயிரிழந்ததுடன், மேலும் ஒரு வர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த துப்பாக்கிச் சூடு கிங் வீஸ்ட் தெருவிலுள்ள ஜாக்சன் ஸ்கொயர் அருகே, மேக்நாப் மற்றும் ஜேம்ஸ் வீதி களுக்கிடையில் நடந்ததாக ஹமில்டன் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவ இடத்திற்கு விரைந்த பொலி ஸார் இருவர் காயமடைந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் பெண் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார், மற்றொரு ஆண் உயிராபத்தற்ற காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

03



# 35 வீத மேலதிக வரி விதிப்பை அறிவித்தார் டொனால்ட் ட்ரம்ப்

ஓகஸ்ட் 1 முதல் கனடாவிலிருந்து இறக்குமதியாகும் பொருள்களுக்கு 35 சதவீத வரி விதிக்கப்படும் என்றும், பிற வர்த்தகக் கூட்டணி நாடுகளுக்கு 15 அல்லது 20 சதவீத வரி விதிக்கப்படும் என்றும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

இது குறித்து கனடா பிரதமர் மார்க் கார்னிக்கு எழுதிய கடிதத்தில்,

ஃபென்டானில் போதைப் பொருள் அமெரிக்காவுக்குக் கடத்தப்படுவதைத் தடுக்க கனடா போதிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை எனவும் அந்த போதைப் பொருளின் பரவலை தடுக்க கனடா ஒத்துழைத்தால் இந்த கூடுதல் வரி விதிப்பு மறு ஆய்வு செய்யப்படலாம் என்றும் ட்ரம்ப் குறிப்பிட்டுள்ளார்.

ஆனால், கனடா அதிகாரிகளோ, அமெரிக்காவுக்குள் கடத்தப்படும் ஃபென்டானில் அளவு மிகவும் சொற்பமானது என்று தெரிவித்தனர்.

இதற்கு முன்னர், கனடாவிலிருந்து இறக்குமதியாகும் கார்கள் மற்றும் வாகன உதிரிப்பாகங்களுக்கு கடந்த மார்ச் மாதம் 25 சதவீத கூடுதல் வரியும், கனடா நாட்டு உருக்கு மற்றும் அலுமினிய பொருட்களுக்கு 50 சதவீத கூடுதல் வரியும் ட்ரம்ப் விதித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



Mark Carney
@MarkJCarney

Throughout the current trade negotiations with the United States, the Canadian government has steadfastly defended our workers and businesses. We will continue to do so as we work towards the revised deadline of August 1.

Canada has made vital progress to stop the scourge of fentanyl in North America. We are committed to continuing to work with the United States to save lives and protect communities in both our countries.

We are building Canada strong. The federal government, provinces and territories are making significant progress in building one Canadian economy. We are poised to build a series of major new projects in the national interest. We are strengthening our trading partnerships throughout the world.




# நிதி நெருக்கடியில் சிக்கிய கனடா கல்வி நிறுவனங்கள்

கனடா பல்கலை மற்றும் கல்லூரிகளில் வெளிநாட்டு மாணவர்களின் சேர்க்கை வெகுவாக குறைந்ததால் நிதி நெருக்கடியில் சிக்கிய கல்வி நிறுவனங்கள், பேராசிரியர்கள், நிர்வாக பணியாளர்கள் என 10,000 பேரை பணி நீக்கம் செய்துள்ளன.

கனடாவில் உயர் கல்வி படிப்பதற்காக, வெளிநாட்டு மாணவர்கள் அதிகளவில் சென்று வந்தனர். அந்நாட்டு அரசு வெளிநாட்டு மாணவர்கள் சேர்க்கைக்கு கடும் கட்டுப்பாடுகளை விதித்தது. மாணவர் விசாவுக்கான எண்ணிக்கையில் வரம்பை நிர்ணயித்தது. இந்த கட்டுப்பாடுகள் வெளிநாட்டு மாணவர்களை நம்பியுள்ள அந்நாட்டின் கல்லூரிகளுக்கே விளைவுகளை ஏற்படுத்தியது.

கனடாவின் ஒன்டாரியோ நகரில் உள்ள கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களில் பாதிக்கும் மேற்பட்டோர் இந்தியர்கள். இந்தாண்டு விதித்த கட்டுப்பாடுகள் இந்திய மாணவர்களின் சேர்க்கை குறைந்தது. அதை ஈடுசெய்ய அரசிடம் அவசர நிதியுதவி வழங்க கல்லூரி நிர்வாகங்கள் கோரின. ஆனால் அதுவும் கிடைக்கவில்லை.

இதனால் பல கல்லூரிகள் துறைகளின் எண்ணிக்கையை குறைத்துள்ளன. 10,000 இற்கும் மேற்பட்ட பேராசிரியர்கள், நிர்வாக பணியாளர்களை பணி நீக்கம் செய்துள்ளன. அரசு தலையிடாவிட்டால் கல்லூரிகளில் பணி நீக்கம் அதிகரிக்கும் என ஒன்டாரியோ அரசு ஊழியர்கள் சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

## காயங்களுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யோவிலுள்ள Quadeville என்னுமிடத்தில், கடந்த மாதம், அதாவது, ஜுன் மாதம் 23 ஆம் திகதி எட்டு வயது சிறுமி ஒருவர் காணாமல் போயிருந்தார்.

மறுநாள் 24ஆம் திகதி, நள்ளிரவு அவள் கண்டுபிடிக்கப்பட்டார்.

பொலிஸார் உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த அந்த சிறுமியை மீட்டு மருத்துவமனையில் சேர்த்த நிலையில், இன்னமும்அவர்மருத்துவமனையில்தான் இருக்கின்றார்.

முதலில், அவளை ஏதோ காட்டு மிருகம் தாக்கியிருக்கலாம் என பொலிஸார் நினைத்துள்ளார்கள்.

இந்நிலையில், அவளது உடலில் இருக்கும் காயங்களிலிருந்து எந்த விலங்கின் னுயே வும் கிடைக்கவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளார்கள்.

தற்போது, இந்த பயங்கர சம்பவம் தொடர்பாக பொலிஸார் கிழக்கு ஒன்றாறியோவைச் சேர்ந்த 17 வயது சிறுவனை கைது செய்துள்ளனர்.

அவன் மீது, அந்தச் சிறுமியை கொலை செய்ய முயன்றது மற்றும் துஷ்பிரயோகம் தொடர்பில் குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

அந்த சிறுவன் 18 வயதுக்குக் குறைவான வயதுடையவர் என்பதால், அவர் யார், அவனுக்கும் அந்த சிறுமிக்கும் என்ன உறவு என்பது போன்ற எந்த விவரமும் வெளியிடப்படவில்லை.

## கனடாவில் வலுப்பெற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாட்டின் வேலையற்றோர் எண்ணிக்கை 0.1 வீதத்தினால் குறைந்து, 6.9 வீதமாக மாறியுள்ளது.

83,000 புதிய வேலைவாய்ப்புகள் உருவாகியுள்ளன, அதில் பெரும்பாலானவை பகுதி நேர பணியாளர்களுக்கானதாக இருந்தது.

தனியார் துறையில் மட்டும் 47,000 வேலை வாய்ப்புக்கள் உருவாகியுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

பொதுவாகவே வேலையற்றோர் வீதம் 7.1வீதமாக உயரும் என எதிர்பார்த்திருந்த நிலையில், ஜுன் மாத இக்கணக்குகள் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளன.

ஜனவரி மாதத்திற்குப் பிறகு இது முதல்முறையாக பெரிய அளவில் வேலை வாய்ப்பு வளர்ச்சியை பதிவு செய்துள்ளது.

கடந்த மூன்று மாதங்களாக வேலை வாய்ப்பு விகிதம் தொடர்ந்து உயர்ந்திருந்த நிலையில் இம்முறை அந்த நிலை மாற்றமடைந்துள்ளது.

## ஹமில்டன் நகரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பொலிஸார் தப்பிச் சென்ற சந்தேக நபரை தேடி வருகின்றனர். அவர் ஜேம்ஸ் வீதியை வடக்கு நோக்கி நடந்தே சென்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த துப்பாக்கிச் சூடு குறிவைத்து நடத்தப்பட்டது என்ற தகவல் தற்போது இல்லையென பொலிஸ் கடமைத் தலைமை ஆய்வாளர் கிரெக் டோர் தெரிவித்துள்ளார்.

சம்பவம் பேருந்து அருகே இடம்பெற்றதாகவும், இருவரும் பேருந்திலிருந்து இறங்கியவுடன் சுடப்பட்டார்களா என்ற விசாரணை தொடர்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.